# பாரதீய ஜனதா கட்சி

# (மத்திய அலுவலகம்)

11, அசோக் சாலை, புதுடெல்லி 110001
தொ.பே. எண்: 23005700; தொலைநகல்: 23005787

தேதி: ஜனவரி 29,2013

பாஜகவின் தேசிய செய்தித் தொடர்பாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பிரகாஷ் ஜாவேத்கர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை

**டீசலுக்கான இரட்டை விலை நடவடிக்கை**

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செயல்படுத்தியுள்ள டீசலுக்கான இரட்டை விலை நடவடிக்கை, சாதாரண குடிமகன் மீது வரலாறு காணாத சுமையை ஏற்படுத்தியிருப்பதை பாஜக கண்டிக்கிறது. இது சங்கடத்துக்குரிய விலை ஏற்றமாகும். டீசல் விலையை நிர்ணயம் செய்வதில் கட்டுப்பாட்டை தளர்த்தும் வேளையில் இரண்டு விதமான வாடிக்கையாளர்களை உருவாக்கியிருக்கிறது. மொத்தமாக டீசலைப் பயன்படுத்துபவர்கள், எண்ணை நிறுவனங்கள் அமைத்துள்ள சில்லறைக் கடைகளில் டீசல் வாங்குபவர்கள் என இரண்டு வகையாக வாடிக்கையாளர்களை அரசு பிரித்துள்ளது. சில்லறைக் கடைகளில் ஒரு லிட்டருக்கு 50 ரூபாய் முதல் 54 ரூபாய் வரை வாங்கிய வாடிக்கையாளர்கள், 62 முதல் 65 ரூபாய் வரை டீசல் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்.

மாநிலப் போக்குவரத்துத் துறைக்கு இதனால் கூடுதலாக 3000 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். அதேபோன்று, ரயில்வே துறைக்கும் 3000 கோடி ரூபாய் கூடுதல் சுமை ஏற்படும். நகரப் பேருந்து சேவைகள் மற்றும் பிற பொது

சேவைகளுக்கும் கூடுதலாக 3000 கோடி ரூபாய் செலவாகும். தனியார் தொழில் நிறுவனங்களும் பிற வர்த்தக நிறுவனங்களும் ஆண்டுதோறும் 6000 கோடி ரூபாயை டீசலுக்குச் செலவழிக்கின்றன. மொத்தமாக டீசல் வாங்குபவர்களுக்கு புதிய வகையினத்தின் கீழ், 18 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் சுமை ஏற்படும்.

இந்தச் சுமைகள் அனைத்தும் நேரடியாக சாதாரண குடிமக்களைப் பாதிக்கும். ஏற்கனவே அவர்கள் மாதம்தோறும் அதிகரிக்கும் டீசல் விலையினால் ஏற்படும் விலைஏற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். டீசல் மீதான அரசின் கட்டுப்பாட்டைத் தளரத்துவதால் 60 ஆயிரம் கோடி ரூபாய் ஒட்டுமொத்த சுமை ஏற்படும்.

மீனவர்களும் ஒட்டுமொத்தமாக டீசலை உபயோகப்படுத்துபவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர். வாடிக்கையாளர்களுக்கு டீசல் வழங்குவதில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் புதிய விதிகளால் விவசாயிகள் கூட கூடுதல் விலை கொடுத்து டீசல் வாங்க நேரிடும்.

டீசலுக்கு மாதம் தோறும் விலை உயர்த்துவதை ரத்து செய்வதோடு, டீசலுக்கான இரட்டை விலை நடவடிக்கையையும் உடனடியாக வாபஸ் வாங்க பாஜக கோருகிறது.

## தெலுங்கானா பிரச்னை

தனித் தெலுங்கானாவை அமைப்பது குறித்த விவகாரத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கண்ணாமூச்சி விளையாட்டை நடத்திக் கொண்டிருகப்பதை பாஜக கடுமையாக கண்டிக்கிறது. ஜனவரி 28 ஆம் தேதி தெலுங்கானா குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கொடுத்த கடைசி வாக்குறுதியையும் மத்திய அரசு மீறியுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இப்பிரச்னை தொடர்பாக நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே இந்த உறுதிமொழியைக் கொடுத்தார். தெலுங்கானா

மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட ஏற்றுக்கொள்ள முடியாத இன்னொரு துரோகம் இது.

2009ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் தேதி, அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த ப. சிதம்பரம், தெலுங்கானா மாநிலம் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன என்று அறிவித்தார். ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்னைகளால் இந்த அறிவிப்பு வெளியான நாள் அன்றே அது கிடப்பில் போடப்பட்டது. 1980 களில் திரு.சென்னா ரெட்டியின் போராட்ட காலத்திலிருந்து காங்கிரஸ், தெலுங்கானா மக்களுக்கு துரோகம் செய்தே வருகிறது.

தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க தொடர்ந்து பாஜக கோரி வருகிறது. மத்திய அரசு உடனே புதிய தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்று பாஜக இன்றும் கோரிக்கை விடுக்கிறது. பட்ஜெட் கூட்டத்தின் முதல் வாரத்திலேயே சரியான மசோதாவைக் கொண்டு வர வேண்டும். அப்படிப்பட்ட மசோதாவுக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி முழுமையான ஆதரவைக் கொடுக்கும். இல்லையெனில் காங்கிரஸ் அரசியல்ரீதியாக கடுமையான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும்.

(ஓ.பி.கோஹ்லி)

*தலைமை நிலையப் பொறுப்பாளர்*